# சீர்திருத்தத்தை வேண்டி நிற்கும் கல்வி முறைமை: ஆயிஷா சிறுகதையை மையப்படுத்திய ஒரு சமூக ஆய்வு

**Safna H.M.F.[119] & Mujahid A.L.M.[120]**

**ஆய்வுச் சுருக்கம்**

இரா.நடராசன் ஒரு சிறுவர் இலக்கிய எழுத்தாளர். இவரின் ஆயிஷா எனும் சிறுகதை பல சமூக கருத்துக்களை புனைவாக்கிய ஒரு படைப்பாகும். ஆயிஷா இன்று பள்ளிக்கூடங்களில் இடம்பெறும் சீர்கேடுகளையும், கல்வி முறையில் உள்ள குறைபாடுகளையும் வெளிக்கொணரும் ஒரு சிறுகதையாக அமையப்பெற்றுள்ளது. மாணவர்- ஆசிரியர் உறவு எவ்வாறு காணப்பட வேண்டும் என்பதனையும் ஒரு மாணவரின் வளர்ச்சியிலும் எழுச்சியிலும் ஆசிரியரின் பங்களிப்பு எத்தகைய முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை விளக்கும் ஒரு சமூகவியல் கதையாகவும் காணப்படுகின்றது. நடைமுறையில் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களினால் இடம் பெறுகின்ற சீர்கேடுகளை யதார்த்தபூர்வமாகவும் உணர்வுபூர்வமாக எளிய நடையில், எள்ளல் பாணியுடன் புனையப்பட்டுள்ளது. மனதை உருகச் செய்யும் சொல்லாடல்கள் பயன்படுத்தப்பட்டு இன்றைய கல்வி முறைமை, ஆசிரியர் செயற்பாடுகள் மாற்றப்பட வேண்டும் என்பதோடு பெண்கள் கல்வி பெறுவது அவசியம் எனவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இக்கதையில் எள்ளலூடாக தற்கால கல்விமுறை பற்றிய விமர்சனமும் முன்வைக்கப்படுகின்றது. இன்று பாடசாலைகள் பணம் சம்பாதிக்கும் வர்த்தக தளங்களாக, மனிதாபமானமற்ற நிறுவனங்களாக மாறி வரும் நிலை உணர்த்தப்பட்டுள்ளது. இவ்வகையில் சமூக நலக்கருத்துக்களை உள்ளடக்கிய சிறுகதை எனும் வகையில் ஆயிஷா கவனத்திற்குரியதாகவும் விரிவான ஆய்விற்குரியதாகவும் அமைந்துள்ளது.

**பிரதான சொற்கள்:** ஆயிஷா, சமூக நல கருத்துக்கள், கல்வி முறைமை

## அறிமுகம்

இரா.நடராசன் 2014 ஆம் ஆண்டிற்கான பால சாகித்ய அகாதமி விருது பெற்ற சிறுவர் இலக்கிய எழுத்தாளராவார். இவர் எழுதிய ஆயிஷா எனும் சிறுகதை ஏற்படுத்திய தாக்கத்தால் ஆயிஷா நடராசன் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றார். இந்த ஆயிஷா சிறுகதை இரா.நடராசன் சிறுகதைகள் என்ற தொகுப்பில் தனிநூலாகவும் வெளிவந்துள்ளது. எளிய தமிழ் அறிவியல் கருத்துக்களையும், சில மொழிபெயர்ப்பு நூல்களையும், மாணவர்களுக்கு உதவக் கூடிய எளிய அறிவியல் சோதனைகள் போன்ற பல நூல்களையும் எழுதியுள்ளார்.

தமிழில் ஒரு இலட்சம் பிரதிகள் விற்பனையான குறும்படமாகவும் படக்கதையாகவும் வீதி நாடகமாகவும் பல தோற்றங்களைப் பெற்ற கதையே ஆயிஷா.இது எட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலகெங்கும் பரவிக் கொண்டிருக்கும் கதையாக காணப்படுகின்றது. இந்தியாவில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் மூலம் தமிழக அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்புக்களின் போது ஆயிஷா கட்டாயப் பாடமாக ஆக்கப்பட்டுள்ளது. ஏழு தன்னதிகார கல்லூரிகள், மூன்று பல்கலைக்கழகங்கள் ஆயிஷாவை பாடமாக வைத்துள்ளன. ஆயிஷா மன்றங்கள் என்று மதுரை மற்றும் கோவையில் கிராமப்புற குழந்தைகளால் தொடங்கப்பட்டு அறிவியல் ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

பறவைகளின் சிறகுகளை உடைத்து கூட்டில் அடைத்து அந்தப் பறவையின் செயற்பாடுகளை நிறுத்துவது போல குழந்தைகளைக் கூட்டுக்குள் அடைக்கும் கல்வி முறையினை விமர்சிக்கும் விதமாக இக்கதை அமையப் பெற்றுள்ளது. இக்கதையில் ஆயிஷா எனும் பதினொராம் தரத்தில் கற்கின்ற சிறுமி அறிவுப் பொக்கிஷமாகவும், புதியவற்றை ஆராயும் ஆர்வம் கொண்டவளாகவும் காணப்படுகின்றாள். அறிவியல் ஆர்வம் மற்றும் தேடல் காரணமாக ஆசிரியர்களிடம் பல அறிவு பூர்வமான கேள்விகளைக் கேட்பதும், அவளைப் பாராட்டுவதற்குப் பதிலாக ஆசிரியர்கள் அவர்களின் குறுகிய தேடலினை, இயலாமையினை வெளிக்காட்ட முடியாமல் ஆயிஷாவை அடக்கி வைப்பதும் தண்டனை வழங்கும் விதமும்

---

To whom correspondence should be addressed: safnahmf@gmail.com

[119] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.

[120] Department of Islamic Studies, Eastern University, Sri Lanka.

விபரிக்கப்படுகின்றது. தண்டனையிலிருந்து மீள ஆயிஷா பரிட்சாயத்தமான முயற்சியில் ஈடுபட்டு இறந்து விடுவதோடு கதை முடிகிறது.

ஆயிஷா எனும் சிறுகதை அடக்கு முறைமையினையும் இன்று பள்ளிக்கூடங்கள் பலிகூடகங்களாக மாறிவருவதையும் கல்வி 'கல்வி' எனும் புனிதத்தை இழந்து ஒரு வியாபாரமாக மாறிவருவதையும் அதில் ஆசிரியர்கள் முதலாளிகளாகவும் மாணவர்கள் வாடிக்கையாளர்களாக பார்க்கப்படுவதும் ஆசிரியர்கள், ஆசிரியர் தொழிலின் புனிதத்தினை மறந்தும் பழையது புகுதல் புதியன தேடாமை, சமூகத்தில் அந்தஸ்தில், பணத்தில் குறைந்தவர்களை பள்ளிக்கூடங்கள் கவனம் செலுத்தாமையும் துள்ளியமாக செயற்பட வேண்டிய வகுப்பறைகள் ஆசிரியர்களின் ஓய்வறைகளாக மாறிவருவதையும் பல இன்னோரன்ன கருத்துக்களை தன்னகத்தே கொண்டதாக எளிய நடையில் எள்ளளுடன் இச்சிறுகதை அமையப் பெற்றுள்ளது.

இவ்வகையில் ஆயிஷா எனும் சிறுகதையில் பதியப்பட்டிருக்கும் கல்வி முறையில் உள்ள சீர்கேடுகள், புனிதம் சேர்க்கும் ஆசிரியர் தொழிலின் செயற்பாடுகள் மற்றும் பெண் என்பவள் சமயலறைக்குள் மாத்திரம் சுருங்குபவளல்ல போன்ற சமூகக் கருத்துக்களை விளக்குவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வில் சமூகவியல், விவரண ஆய்வு முறைமைகள் கையாளப்பட்டிருப்பதோடு இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக ஆயிஷா எனும் சிறுகதைத் தொகுப்பு, ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் ஆயிஷா தொடர்பான இணையத்தளப் பதிவுகள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆயிஷா சிறுகதையினூடாக சீர்திருத்தத்தை வேண்டி நிற்கும் கல்வி முறைமையும் சமூக நலக் கருத்துக்களும்**

அறிவுத்தாகம், துணிவு, புத்தாக்கம் அனைத்தையும் ஆராயும் திறன் மற்றும் சீரிய சிந்தனை போன்றவற்றைக் கொண்ட ஆயிஷா இன்றைய கல்வி முறையால், ஆசிரியர்களின் செயற்பாட்டினால் பழியாவதை விவரிக்கின்ற ஒரு கதையாக இக்கதை வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆயிஷா எனும் கதாபாத்திரத்தினை அறிமுகம் செய்வது முதல் கதை முடியும் வரை ஆசிரியர் சமூகத்தில் காணப்படும் விரிசல்களை, இன்றைய பள்ளிக்கூடங்களின் நிலையை விளக்குகின்றார். தொடக்கம் முதல் முடிவு வரை பல்வேறுபட்ட சமூக நலக் கருத்துக்களை உள்ளடக்கியதாக இவ்வறிவியல் புனைக்கதை அமைந்துள்ளது.

ஒரு விஞ்ஞான நூலுக்கு அதன் ஆசிரியர் எழுதிய முன்னுரை என்ற வகையில் இக்கதை ஆரம்பமாகிறது. வெளிவருகின்ற இந்த நூலுக்கும் இன்னுமுள்ள 12 நூல்களுக்கும் காரணம் ஆயிஷா என ஆயிஷாவைப் பற்றிய நல்லெண்ணத்தை வாசகர் மத்தியில் கொடுத்துவிட்டு ஆசிரியர் கதையை ஆரம்பிக்கின்றார்.

**"இந்த விஞ்ஞான கேள்வி பதில் நூலையும் இவ்வரிசையில் வர இருக்கும் இன்ன பிற பன்னிரண்டு நூல்களையும் தமிழில் எழுத தூண்டியது ஆயிஷாதான்"**

அதன் பின் ஆசிரியை பற்றி அறிமுகப்படுத்துகின்ற போது பல்வேறுபட்ட சமூகக் கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றது.

**"நான் அறிவியல் ஆசிரியையாக பணியாற்றிய ஒரு கிறிஸ்துவப் பள்ளியில்.....**

**"நாங்கள் எட்டு பேர் அவ்விதம் காப்பாள யுவதிகளாக நியமிக்கப்பட்டிருந்தோம். திருமணமாவதன் மூலம் இந்த சூழல் வாழ்விலிருந்து தப்புவோர் அவர்களுக்கு பதிலாய் வரும் புதியோர் தங்கள் திருமணத்திற்காக காத்திருக்க தொடங்கும். அப்பணியிடத்தில் சற்றேறக்குறைய நிரந்தர யுவதிகளாக நானும் ஆஸ்துமாகாக்காரி ஒருத்தியும் திருமணமாகாமல் தங்கிப்போனோம்."**

**"நீண்ட பகலும் நிம்மதியற்ற இரவுகளும் என்னை தின்று கொண்டிருந்த அந்த நாட்களில் அறிமுகமானவள்."**

இந்த வரிகளின் ஊடாக திருமணமாகாத இளம் பெண்களின் மனநிலையை படம் பிடித்துக்காட்டியுள்ளார். திருமணமாகாதவர்கள் என்ற காரணத்தினால் விடுதிக் காப்பாளர்களாக இருக்கும் அவல நிலையையே பின்வரும் வரிகளினூடாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**“பற்கள் துருத்தியபடி முகத்தில் வந்து விழுகிற கேசத்தைப் பற்றிய அக்கறையின்றி நாலாவது வரிசையில் குச்சியாக அமர்ந்திருக்கும் ஒருத்தி ஆசிரியையின் அபிமானத்தைப் பெற வாய்ப்பில்லை.”**

எனும் வரிகளினூடாக இன்றைய ஆசிரியர்கள் ஏழ்மை, கவலை மற்றும் வாழ்வில் இன்னல் காரணமாக நொந்து வாடிப்போயிருக்கும் மாணவர்களை அலட்சியப்படுத்தும் நிலை உணர்த்தப்பட்டுள்ளது. மாறாக அந்த மாணவி அழகாக ஆடை அணிந்து அதாவது பணக்கார மாணவியாக இருந்தால் ஆசிரியர்களின் அபிமானத்தை பெற்றிருப்பாள் என ஆசிரியர் சொல்ல வருகின்றார். ஆசிரியர்கள் ஏழை மாணவர்களை ஒரு விதமாகவும் செல்வந்த மாணவர்களை ஒரு விதமாகவும் பாரபட்சமாக நோக்கும் நிலை உணர்த்தப்படடுள்ளது.

**“பல ஆண்டுகளாக ஒரு வகுப்பில் ஒரு குறிப்பிட்ட பாடத்தையே தொடர்ந்து போதிக்கும் எல்லா ஆசிரியைகளையும் போலவே நானும் ஒரு எந்திரமாய் ஆகிப்போயிருந்தேன். சில வேளைகளில் பாடத்தை நடத்தினோமா என்ற ஞாபகமே இல்லாமல் கூட நடத்தியிருக்கிறேன்.”**

**“காலையில் எழுந்து பல்துலக்குவதை உற்சாகத்தோடவா செய்கிறோம்? எப்போதாவது புதிய பிரஷ் அல்லது பேஸ்ட்!இங்கே அதுவும் இல்லை.அதே ஓம்ஸ் விதி. ஒரே செல் பிரிதல் புதிதாகத் தெரிந்து கொள்ளும் ஆர்வமற்று ஓர் இயந்திரமாய் கீரீச்சுட்டுக் கொண்டிருந்த என்னை என் முகத்தில் கேள்விகளால் ஓங்கி அறைந்தாள் ஆயிஷா.”**

என்ற வரிகள் உள்ளத்தை உருக்கும் வார்த்தைகளாகக் காணப்படுகின்றன. இங்கு ஆசிரியரகள் இயந்திரத்துக்கு ஒப்பிக்கப்படுகிறார்கள். இயந்திரம் எந்நாளும் ஒரே வேலையைத்தான் செய்யும். அதற்கு செய்முறை எப்படிக் கொடுக்கப்படுகின்றதோ அதன்படியே இயங்கும். தானே நினைத்து புதிய ஒரு நுணுக்கத்தை, முறையைக் கையாண்டு வேறு முறையில் இயங்காது. அது போலவே ஆசிரியர்களும் புத்தாக்கம் இல்லாமல் மாணவர்களின் சிந்தனை திறனை மேம்படுத்தும் வகையில் கற்பிக்காமல் இயந்திரம் போல் பாடவிதானத்தில் இருக்கின்ற விடயங்களை மாத்திரம் மாணவர்களிடத்தில் ஒப்புவிக்கின்ற நிலைமை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.அது மாத்திரமன்றி ஆசிரியர்கள் சோம்பேறிகளாக பாடம் நடத்தி மாணவர்களையும் வகுப்பறையில் தூங்க வைக்கின்ற யதார்த்தமாக பரவலாக இன்று பாடசாலைகளில் நடக்கின்ற அவலக்காட்சி வாசகர் முன் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**“காந்தத்தின் வடநோக்கு அம்சம் குறித்து வழக்கமான எந்திரத்தனத்துடன் யாவரையும் உறங்க வைத்துவிடும் என் தொனியில் கரும்பலகையில் சில கிறுக்கல்களுடன் நடத்திக் கொண்டே போனேன்.எவ்வளவு நேரமோ?”**

ஒரு மாணவன் சிந்திக்கத்தக்க அறிவுபூர்வமான, ஆசிரியர்களுக்குப் பதிலளிக்க முடியாத கடினமான வினாக்களைத் தொடுக்கின்ற போது அம்மாணவனைச் சாடுவதும், மட்டம் தட்டுவதும், இழிவுபடுத்தி இனிமேல் கேள்வி கேட்க விடாமல் அடக்குவதும் பாடசாலைகளிலும் கல்வி கூடங்களிலும் சர்வசாதாரணமாக இடம்பெறுகின்ற ஓர் அநீதியாகும். ஆசிரியர்கள் தன் இயலாமையை வெளிப்படுத்த முடியாமல் மாணவர் மீது சாடுகின்ற காட்சியினூடாக இன்றைய சில ஆசிரியர்களின் நடத்தையை வாசகர் முன் பின்வரும் வரிகள் கொண்டு வருகின்றன.

**“இது நிச்சயம் ஆச்சரியமான ஒன்றுதான். சராசரி ஆசிரியை யாரையும் இது எரிச்சலூட்டுவது. சட்டென முகம் சுருக்கி சுள்ளென எரிந்து விழும் குரலில் ‘என்ன?’ என்றேன்.**

மாணவர்கள் ஒரு வினாவைக் கேட்கின்ற போது அதற்கு விடை தெரியாமல் தேடலின் மூலம் தெரிந்து கொள்ளும் மனப்பாங்கு இல்லாத ஆசிரியர்களின் நிலை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மாணவர் கேட்ட

கேள்விக்குப் பதிலளிக்கின்ற போது அதனை ஏற்று சமாளிக்கின்ற விதமும் பின்வரும் வரிகளுடாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**"அந்த காந்தத்தை வெட்டிக்கிட்டே போனா? உதாரணமாக நமக்கு இந்த காந்தத்தை துண்டாக்கிக் கிடைத்த காந்தங்களின் எண்ணிக்கை ஒரு முடிவுறா எண் என்று வெச்சிட்டா??"**

**"ரொம்ப சிம்பிள்மா….. முடிவுறா எண்ணிக்கையில காந்தம் கிடைக்கும்."**

தான் மேற்கொண்ட ஆய்விற்கு, தனக்குள்ளே ஏற்பட்ட கேள்விகளுக்கு சிறந்த பதில் கிட்டும் வரை அதனைத் தேடும் அறிவுத்தாகம் கொண்ட ஒரு மாணவியின் நிலை எடுத்துக்காட்டப்படுகிறது. ஆசிரியர் வகுப்பறையை விட்டு சென்றாலும் அவரின் பின்னால் சென்று தன் கேள்விகளுக்கு பதில் தேடும் அறிவுத்தாகம் கொண்டவள் ஆயிஷா.

மாணவர்கள் நலன், பாடசாலை நலன்,மாணவர்களின் திறன் மேம்படுத்தலுக்கான வழிகளைப் பற்றி கலந்தாலோசிக்க வேண்டிய ஆசிரியர்கள் ஓய்வறைகளில அலங்காரங்கள் புதிய புடைவை, அணிகலங்கள் பற்றிப் பேசி ஓய்வெடுக்க வேண்டிய அறையில் களைப்பதுவும் பாடம் நடத்த வேண்டிய வகுப்பறையில் கற்பிக்காமல் ஓய்வெடுப்பதையும் மிக எள்ளலுடன் ஆசிரியர் வாசகர் கண்முன்னே எடுத்துக்காட்டுகின்றார்.

**"ஓய்வறையில் ஆசிரியைகள் புதிய புடவை டிசைன்களைப்பற்றி நீண்ட விவாதத்தில் ஈடுபட்டிருந்தார்கள். சரோஜினிக்கும் ரெஜினா மிஸ்ஸுக்கும் இதே தான் வேலை. இல்லையென்றால் நகைகளின் வித்தியாசங்கள், ஒரு நாள் புருவம், மறுநாள் மச்சம். இப்படி பேசிப் பேசிக் களைத்து பாடம் நடத்த வேண்டிய வகுப்பறையில் ஓய்வெடுப்பார்கள்."**

ஒருவர் கடந்த காலத்தில் தவறு செய்தால், அத்தவறை அவர் உணர்ந்து, மனம் சீர்பெற்றால் அவருக்கு கடந்த காலத்தில் செய்த செயல்களில் அருவருப்பு ஏற்பட வேண்டும். கடந்த காலத்தில் செய்த தவறான செயல்களை எண்ணி அருவருப்புக் கொள்ளும் மனநிலை திருந்திய மனதின் இயல்பு என்ற கருத்தை இக்கதை உள்ளடக்கியிருக்கிறது. ஆயிஷாவின் விஞ்ஞான ஆசிரியை தான் கடந்த காலத்தில் செய்த தவறுகளை வெறுப்பாக எண்ணுகிறாள்.

**"இப்போது புதியவளாக இருந்தேன். அவர்களைப்பார்த்து எனக்கு அளவற்ற அருவருப்பு உண்டாகி இருந்தது."**

பாடசாலைகள் கற்பிப்பது மாத்திரம் அல்லாமல் மாணவர்கள் தம் வாழ்க்கையில் உயர்வதற்கான வழிகாட்டல்களை வழங்கி, ஒவ்வொரு மாணவனினதும் திறனை அடையாளம் கண்டு, அவனிடத்தில் சிந்தனைத்திறன், புத்துருவாக்கம் என்பவற்றை உயர்த்தி வாழவைக்க வேண்டிய பள்ளிக்கூடங்கள் பலிக்கூடங்களாக ஆகி வருவதையும், மாணவர்களின் வாழ்வை அழிக்கக்கூடிய பலிக்களமாக மாறி வருகின்ற நிலை எள்ளலுடன் உணர்த்தப்பட்டுள்ளது.

**"பள்ளிக்கூடங்கள் பலிக்கூடங்கள் ஆகிவிட்டன."**

இந்த வரியை இன்னுமொரு கோணத்திலும் நோக்கலாம். ஆசிரியர்கள் மாணவர்களை பலிச்சொற்கள் வைத்து பலிப்பதையும் குறிப்பிடலாம்.

**"குதிரை மூஞ்சி, நரிவால், எலிவால் என்றெல்லாம் குழந்தைகளுக்கு பெயர் வைத்திருந்தார்கள். ரெஜி ….ரெஜிமா.. கொன்னுட்டி' என்று ஆராதனை வேறு."**

ஆசிரியர் கிணற்றுத் தவளைகளாக, புத்தகத்தில் இருக்கின்றவற்றை மாத்திரம் கற்பிக்கின்ற விதம் எள்ளி நகையாடப்பட்டுள்ளது.

**"எல்லாமே முன் தயாரிக்கப்பட்டவை. ரெடிமேட் கேள்விகள். அவற்றிற்கு நோட்ஸ்களில் ரெடிமேட் பதில்கள்".**

காலம் காலமாக தனது இருபது முப்பது வருட சேவைக்காலத்திலும் ஒரு வினாவை கேட்பதும், ஒரே விடையை சொல்லும் நிலையும், புதிய நோக்கத்தில் சிந்திக்காமை என்பனவும் புதியன புகுத்தி ஆசிரியர்கள் புத்தாக்க சக்தி கொண்டவர்களாகத் திகழ வேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

வகுப்பறையில் உற்சாத்துடன் இயங்க வேண்டிய ஆசிரியர்கள் அதனை ஓய்வெடுக்கும் ஓய்வறைகளாக மாற்றிக்கொள்கின்ற நடைமுறை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**“வகுப்பறையில் ஆசிரியர்கள் ஓய்வெடுக்கிறார்கள்”.**

இன்று கல்வி கணித ரீதியாக மதிப்பிடப்படுகிறது. பண்பு ரீதியாக மதிப்பிடப்படாத கல்விமுறை சீராக்கத்தின் தேவை குறித்தும், தற்கால கல்விமுறையைச் சாடுவதாகவும் பின்வரும் வரிகள் அமைந்துள்ளன.

**“எல்லா மாணவர்களுக்கும் எண்கள் தரப்பட்டுள்ளன. வகுப்பு, வரிசை எண், தேர்வு எண், பெற்றெடுக்கும் மதிப்பெண்கள். எங்கும் எண்கள், எண்களே பள்ளிகளை ஆள்கின்றன”.**

இன்று பள்ளிக்கூடங்கள் மாணவர்களை நடத்துகின்ற விதத்தினையும் விபரீதத்தினையும் விளக்க ஆசிரியர்களைத்தான் மூல காரணமாகக் காட்டப்பட்டுள்ளது. மாணவர்களைப் பாராட்டி, வழிகாட்டல்களை வழங்க வேண்டிய ஆசிரியர்களே மாணவர்களின எதிர்காலத்திற்கு சவாலாக இருளாக மாறிவிடுகின்ற பரிதாப நிலை உணர்த்தப்படுகிறது. ஆசிரியர்களிடம் இருந்து மாணவர்களை காப்பாற்றும்படி இறைவனிடம் வேண்டுவதனூடாக இந்நிலை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

**“இங்கு வந்து ஏன் பிறந்து தொலைத்தாள். அம்மா அப்பா இல்லாதவலாமே…கடவுளே எங்கள் குழந்தைகளை ஆசிரியர்களிடம் இருந்து காப்பாற்றும்”.**

ஒவ்வொரு ஆசிரியரும் தனது சொந்த துறையில் தேர்ச்சி பெற்றவர்களாகத் திகழ வேண்டும். இல்லையெனில் அவர்கள் உயிரற்ற மானமற்ற பிண்டங்கள் என சமூகத்தை மேம்படுத்தும் சமூக நலக் கருத்துக்கள் இக்கதையில் பொதிந்துள்ளன.

**“எனது சொந்தத்துறை மீதே எவ்வித அக்கறையும் இல்லாமல் சொரணையற்ற பிண்டமாக ஆறு ஆண்டுகள் வெறுமனே தள்ளியிருக்கிறேன்”.**

ஆசிரியர்கள் கெட்டிக்கார மாணவர்கள் அதிகமாக வினாக்களை தொடுக்கின்ற போது அவர்களை அடக்குகின்ற விதமும் அதுமாத்திரமன்றி தண்டித்து அம்மாணவர்களை அடக்கும் முறையும் இக்கதையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**“ஆயிஷாவின் பின்காலில் பட்டை பட்டையாக வீக்கம் தடித்துப்போகுமளவு அடிவாங்கியிருந்தாள்”.**

**‘கெமிஸ்ட்ரி மிஸ் அடிச்சாங்க’ என்றேன்.**

**‘ஏன் ஏன் ஆயிஷா?’**

**‘பேப்பர் வந்தது. மார்க் சரியா போடல. கேட்டேன் சொந்த சரக்குக்கெல்லாம் மார்க் கிடையாதாம். நோட்ஸ்ல இருக்கிறத அப்படியே எழுதனுமாம். டென்த்துன்னு மிரட்டுறாங்க. மிஸ்…. நோட்ஸ்ல தப்பாயிருந்தா என்ன பன்றதுன்னு கேட்டேன். பேச முடியவில்லை. அவளால் காணச் சகிக்கவில்லை. அழும்போது அவள் குழந்தையாக இருக்கின்றாள்.**

ஒரு கெட்டிக்கார மாணவி புத்தாக்கம் கொண்ட ஒரு கருத்தினை எழுதும் போது வரவேற்கவேண்டிய ஆசிரியர் சமூகம் மாறாக தண்டிக்கின்ற நிலைக்கு வந்த விட்டது. இதனால் ஆசிரியர்கள் பயிற்சியளிக்கப்பட வேண்டும், கல்வி முறைமை மாற வேண்டும் என்ற கருத்தை இக்கதை அவாவி நிற்கின்றது.

**“கடவுளே..அவரவர் அறிவைப் பயன்படுத்த அனுமதியுங்களேன்”.**

எனும் வரிகள் ஊடாக இதன் தாக்கம் உணர்வுபூர்வமாக எடுத்துக்கட்டப்பட்டுள்ளது.

இன்று கல்வி விலை பேசப்படும் ஒரு பொருளாக மாறிவருகின்ற நிலை எடுத்துக் காட்டப்படுகின்றது. ஆசிரியரிகள் பணத்திற்காக கல்வியை விலை பேசுகின்றார்கள். பாடசாலை நேரத்தில் கற்றுக்கொடுக்காமல் மேலதிக வகுப்பு வைத்து அதில் கற்பித்து உழைக்கும் ஆசிரியர்களின் நிலையும் மேலதிக வகுப்பு செல்கின்ற மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் இடையில் பாரபட்சம் காட்டும் விதமும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயிஷா மேலதிக வகுப்பு செல்லாததால் பழிவாங்கப்பட்டாள்.

**"தவிர வேறுவிதச் சிக்கல்கள். டியுஷன், கிட்டத்தட்ட எல்லா ஆசிரியைகளுமே வீட்டில் தனியாக டியூசன் நடத்தி வந்தனர். பணம், எல்லாம் அது படுத்தும் பாடு. போட்டா போட்டி சண்டை. வீட்டிற்கு படிக்க வருவோருக்காக விசேஷ சலுகை, சட்டங்கள், வகுப்பில் ராஜமரியாதை. வினாத்தாள்கள் முன்பே அறியும் உரிமை. எவ்வளவு குமட்ட வைப்பது அது வெட்கமில்லாமல் இதை அவர்கள் செய்தே வருகிறார்கள். வருமான வரியில் சேராத வருமானம் யார் தான் விடுவார்கள்?**

**ஆயிஷா யாரிடமும் டியூசன் படிக்காதவள் என்பதால் பழி வாங்கப்பட்டாள்."**

இதனை ஆசிரியர் குமட்ட வைக்கும் ஒரு அருவருப்பான செயலாக எடுத்துக்காட்டுவதனூடாக சமூகம் இவற்றை தவிர்த்து ஆசிரியர் இத்தொழிலை புனிதமாக செய்ய வேண்டும் என்ற சமூகநலக் கருத்து விவரிக்கப்பட்டுள்ளது.

அறிவுத்தாகம் கொண்ட ஒரே காரணத்தினால் தண்டிக்கப்பட்டு, அத்தண்டனையை தன் உடம்பு உணராமல் இருக்க மருந்து கேட்கின்றாள் ஆயிஷா.

**"டீச்சர் அடிச்சா வலிக்காமல் இருக்க ஏதாவது மருந்து இருக்கா? என்று கேட்கிறாள் ஆயிஷா".**

ஆசிரியர்கள் மாணவர்களுடன் அன்பாக நடந்தால் அம்மாணவர்கள் ஆசிரியர்களை உயிரை விட மேலாக நினைப்பார்கள் என்ற கருத்து இக்கதையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. தன் பெற்றோரை இழந்து சித்தியிடம் வளரும் ஆயிஷா தன் கேள்விகளுக்கு செவிசாய்க்கும் விஞ்ஞான ஆசிரியை மீது வைத்துள்ள அன்பு பின்வருமாறு தெளிவுபடுத்தப்படுகிறது.

**"அந்தப்பக்கம் என் பெயரை எழுதியிருந்த ஆயிஷா அதற்கு கீழே 'என் தாயார், என் முதல் ஆசிரியை, என் முதல் உயிர்' என்று ரத்தத்தால் எழுதியிருந்தாள்.**

**ஆம். அது ரத்தம் தான். அய்யோ.. இது என்ன பெண்ணே.. உனக்கு என்ன நான் செய்து விட்டேன். உனது கேள்விகள் சிலவற்றைக் காது கொடுத்து கேட்டதைத் தவிர அதற்காகவா இத்தனை அன்பு பொழிகிறாய்?"**

அடிகளினதும் உதைகளினதும் வலியை தாங்க முடியாத ஆயிஷா, உடல் மருத்துப் போனால் வலியை உணர முடியாது என உணர்ந்த ஆயிஷா மருத்துப்போகின்ற மருந்தை தானே செய்து தவளைக்கு ஏற்றுகிறாள். அவள் எண்ணியபடியே தவளை மருத்துப் போகவும் ஆசிரியர்கள் தண்டிக்கின்ற போது தன் உடம்பு வலியை உணராதிருக்க மருந்தை தன் உடம்பில் ஏற்றுகிறாள்.

**'இந்தாங்க ஸ்கேல் ..என்னை அடியுங்க பாப்போம்.'**

**ஏன் ஆயிஷா என்ன சொல்ற நீ...'**

**மருந்து மிஸ்...மருத்துப்போற மருந்து.. இனிமே யாரு அடிச்சாலும் எனக்கு வலிக்காது மிஸ்...எப்படி வேணும்னாலும் அடிச்சிக்கட்டும்.'**

**ஆயிஷா உனக்கென்ன பயித்தியமா?**

**லேபிலிருந்து நைட்ரஸ் எத்தனால் கரைசல் கெடச்சது மிஸ். முதல்ல இந்த தவளைக்கு ஊசி போட்டேன். இரண்டு மணி நேரம் மல்லாக் போட்டாலும் உணர்ச்சி இல்ல.. அப்போ மரத்துப்போச்சினு அர்த்தம்.'**

**அப்புறம் அதே மருந்தை எனக்கு ஊசி போட்டுக்கிட்டேன்.எப்படி ஐடியா...'**

**ஏம்மா இப்படியெல்லாம் பன்ற.'**

**பாருங்க இந்த தவளைதான்.'**

**நான் பார்த்த இடத்தில் வாளித் தண்ணீரில் ஒரு தவளை தலைகீழாய் மிதந்தது.**

**ஆயிஷா ..நோ....'**

**அய்யயயோ …தவளை செத்துப்போச்சி மிஸ்'**

**கடவுளே அதற்கு மேல் எழுத என்ன இருக்கிறது? வேதியியல் ஆய்வுக்கூடத்தின் பின்னால் ஆயிஷா விழுந்து கிடந்தாள்….**

**ஆனால் ஆட்டோவில் ஆஸ்பத்திரிக்குப் போவதற்குள் என் ஆயிஷா பிரிந்து விட்டாள்.**

ஒரு அறிவுக்களஞ்சியம், அறிவின் ஊற்று,ஆராயும் ஒரு ஆய்வாளர், அறிவுத்தாகத்தை தணிக்க துடித்த ஒரு அறிவியல் மேதை ஒரு சில ஆசிரியர்களின் செயற்பாட்டால் இவ்வுலகை விட்டு மறைந்து விட்டது.

பள்ளி நிர்வாகமும் ஆசிரியர்களும் பள்ளியின் புனிதத்தை இழக்கச் செய்து விடுகின்றனர். கல்வி எனும் ஏணியில் ஏறிச்சென்று உச்சத்தை அடைய வழிகாட்ட வேண்டிய பள்ளிக்கூடங்கள் பலிக்கூடங்கள் ஆகிவிட்டன. ஆயிஷா பலியாக்கப்படடுவிட்டதனூடாக கல்வி முறைமை சீர்திருத்தப்பட்டு மாணவர் கலைகள் ஓங்க வேண்டும் என இக்கதையில் எடுத்துக்காட்டப்படுகிறது.

ஆயிஷாவின் அன்பு விஞ்ஞான ஆசிரியரின் புலம்பலினூடாக ஆசிரியர் சமூகத்தை சாடி இனிமேலும் ஆயிஷாக்களை இழக்ககூடாது என்பதை தெளிவுறுத்துகிறார்.

**இனி என்ன? உங்களுக்கு திருப்திதானே மிருகங்களே… என் ஆயிஷாவை ஒப்பற்ற அந்த அறிவுக்கொழுந்தைக் கொன்று தீர்த்துவிட்டீர்களே. போங்கள். இனி உங்கள் வகுப்புக்கள் எளிமையானவை. அறிவுக்கு அங்கே வேலை இல்லை.**

அறிவு என்ற தீபத்தை ஏற்ற வேண்டிய நீங்களே அறிவு எனும் கொழுந்தை வளர்க்க வேண்டிய நீங்களே அதனை அனைத்தால் கொழுத்தினால் சமூகத்தில் அறிவுத்தாகம் கொண்ட ஆயிஷாக்கள் எங்கே உருவாகப்போகிறார்கள் எனும் கருத்து மேற்கண்ட வரிகளில் புலப்படுகிறது.

பெண் என்பவள் போற்றப்படத்தக்கவள். அலைகளைத் தாண்டி கரைகாண வேண்டிய ஒரு படைப்பு. பெண் என்பவள் வெறுமனே சமைப்பதற்கும், வீட்டு வேலைகளை செய்வதற்கும், பிள்ளைகளைப் பெறுவதற்குமான இயந்திரம் அல்ல. விஞ்ஞானிகளாக, ஆய்வாளர்களாக, சாதனையாளர்களாக மிளிர வேண்டும் என பெண் கல்வியின் அவசியம் பற்றி எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**"மிஸ் கரோலின் ஏர்ஷல் போலவோ மேரி கியூரி போலவோ நம்ம நாட்டுல பெயர் சொல்ற மாதிரி ஒரு பெண் கூட விஞ்ஞானியா வர முடியலையே ஏன்?"**

**"இக்கேள்விக்குரிய பதிலை நான் சொல்ல வேண்டியதில்லை. தங்கள் சொந்த வீடுகளின் இருண்ட சமையலறையில் போய் அவர்கள் அதைத் தேடட்டும்."**

என சமூகத்தினால் அடக்கப்பட்டு சமையலறையில் கிடக்கும் ஒவ்வொரு பெண்ணுள்ளும் ஆயிஷாவின் அறிவு, துணிவு இருந்திருக்கும். ஆனால் ஆயிஷா முடக்கப்பட்டதைப் போல முடக்கப்பட்டு விட்டது. எனவே ஒரு பெண் என்பவள் சரித்திரம் படைக்ககூடியவள். அவளை ஒரு குறுகிய நோக்கில் நோக்காது அவளுக்கு கல்வி பெற ஆவண செய்து ஆயிஷாக்களை உருவாக்க வேண்டும் என பெண்கல்வி அவசியம் குறித்தும் பேசப்பட்டுள்ளது.

## முடிவுரை

இவ் அறிவியல் புனைகதை சமூகத்தில், கல்வி முறையில்,பள்ளிக்கூடங்களில் மற்றும் ஆசிரியர்களிடத்தில் காணப்படும் சீர்கேடுகளை வெளிக்கொணரும் ஒரு சமூக நலனை மையமாகக் கொண்ட ஒரு சிறுகதையாகக் காணப்படுகின்றது. மாணவர்-ஆசிரியர் உறவு எவ்வாறு காணப்பட வேண்டும் என்பதனையும் ஒரு மாணவனின் வளர்ச்சியிலும் எழுச்சியிலும் ஆசிரியரின் பங்களிப்பு எத்தகைய முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை விளக்கும் ஒரு சமூகவியல் கதையாகவும் காணப்படுகின்றது. நடைமுறையில் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களினால் இடம் பெறுகின்ற சீர்கேடுகளை யதார்த்தபூர்வமாகவும் உணர்வுபூர்வமாக எளிய நடையில், எள்ளல் பாணியுடன் புனையப்பட்டுள்ளது. மனதை உருகச் செய்யும் சொல்லாடல்கள் பயன்படுத்தப்பட்டு இன்றைய கல்வி முறைமை, ஆசிரியர் செயற்பாடுகள் மாற்றப்பட வேண்டும் என்பதோடு பெண்கள் கல்வி பெறுவது அவசியம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**உசாத்துணைகள்**


1. Aysha nararajan, retrieved from: www.amazon.in/Books-AYESHA...NATARAJAN/s?...27%3AAYESHA%20ERA%20 on April 4th 2017.
2. Aysha freetamilebooks.com/ebooks/ayesha on June 7th 2017.
3. Aysha, retrieved from: https://en.wikipedia.org/wiki/Ayesha on May 4th 2017.
4. Goodreads, ஆயிஷா, retrieved from: www.goodreads.com/book/show/5055097-ayeesha on May 4th 2017.
5. Insuting the child, retrieved from: www.thehindu.com/features/metroplus/'Insulting-the-child.../article14620119.ece on May 4th 2017.